# பயப்படாதே! பாடித்துதி

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

பிரபு, பாட்டி வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று வந்தான். பள்ளிக்கு செல்லும் வழியில் சில பையன்கள் இவனைப் பார்த்ததும் கேலிபண்ணி சிரிப்பதும், டேய், வாடா என்று அதட்டுவதுமாக இருந்தார்கள். இவனோ பேசாமல் போய்விடுவான். இப்படி இரண்டு மாதம் போய்விட்டது. இருந்தாலும், இவனுக்கு ஸ்கூலுக்குப் போறது கஷ்டமாகவே இருந்தது, கொஞ்சம் பயமாகவே இருந்தது. அதினால பாட்டியிடம் சொல்லி விடுவோம்னு நினைச்சு, அவன் பாட்டியிடம் போய் நடந்த எல்லா-ாவற்றையும் சொன்னான். அப்ப பாட்டி அவனைப் பார்த்து பிரபு, பயப்படாதே! பாடித்துதின்னு சொன்னாங்க, அதற்கு பிரபு என்ன பாட்டி நீங்க, ஸ்கூலுக்குப் போகாம நான் இங்கேயிருந்து பாட்டுப்பாடவா என்று வேகமாக, கோபமாகப் பேசினான். பாட்டி சொன்னாங்க, தம்பி பிரபு, இங்கே வா, யோசபாத்துன்னு ஒரு ராஜா இருந்தாரு, அவர் ஆண்டவர் சொல்றதெல்லாம் கேட்டு அப்படியே செஞ்சாரு. மக்கள் எல்லாருக்கும் நல்லதும் செஞ்சாரு. ஒரு தடவை அவருடைய நாட்டுக்கு எதிரா மூன்று ராஜாக்கள் ஒன்னு சேர்ந்து சண்டைக்கு வந்துக்கிட்டு இருக்கிறாங்கன்னு செய்தியைக் கேட்டதும் ரொம்பவே பயந்திட்டாரு என்று பாட்டி சொன்னதும், பிரபு சொன்னான், பாட்டி பாத்தீங்களா, பாத்தீங்களா? ஒரு ராஜாவுக்கே பயம் வந்திருக்குதுனா எனக்குப் பயம் வராதா? என்றான். பயம் வந்துச்சு என்பது உண்மை தான். ஆனால் பயத்தை, எதிரிகளை எப்படி ஜெயிச்சாருனு கேளு என்றாங்க. அப்புறம் ஆண்டவரைப் பார்த்து பரலோகத்தில் இருக்கிற நீங்க தான் தேவன். என் தேவன், இப்ப



எதிரிகளை எதிர்த்து சண்டை போட எங்களுக்குப் பெலனுமில்லை, என்ன? செய்ய வேண்டியதுன்னும் தெரியவில்லை என்று ஜெபம் பண்ணினாரு. ஆண்டவரும் அவர்களோடு பேசினார். இந்த யுத்தம் உங்களுடையதல்ல தேவனுடையது. அதனால பயப்படாதீங்க!, கலங்காதீங்க!, நான் உங்களோடு இருக்கிறேன். நாளைக்கு நீங்க அவங்களுக்கு எதிரா புறப்பட்டுப் போங்கள் என்று ஆண்டவர் அவங்களோடு பேசி சொன்னாரு. அப்படியே மாறுநாள் காலையிலே ராணுவ வீரர்களெல்லாரும் யுத்தத்துக்கு அணிவகுத்து நிற்கும்போது அவங்களுக்கு முன்னாக ஆண்டவரைப் பாடித்துதிக்கிற ஒரு பாடகர் குழுவை, கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று துதிக்கும் பாடகர்களை நிற்கச் செய்தாரு அவங்க எல்லாரும் கர்த்தரை பாடி-த்துதிக்க ஆரம்பிச்ச உடனேயே எதிரிகள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டு அழிந்து போனார்கள். அதற்கப்புறம் அவங்க எதிரிகள் பயமில்லாமல், எந்தப் பயமுமில்லாமல் அமைதியாய், சந்தோஷமாய் இருந்தாங்க. (2 நாளா 20:1-30) பாட்டி நீங்க சொன்னதிலிருந்து எனக்குப் புரிஞ்சிருச்சு, நல்லாவே புரிஞ்சிருச்சு நமக்கு பயமோ, கவலையோ வந்தா இயேசப்பா கிட்ட சொல்லி, அவரைப் பாடி மகிமைப்படுத்தின பயமும் பறந்திடும், எதிரான மனிதர்களும், நமக்கு தீமை செய்ய மாட்டார்கள். இனிப் பயப்படாமல் ஸ்கூலுக்குப் போவேன். இயேசப்பாவை நல்லா பாட்டுப்பாடித் துதிப்பேன். வாங்க பாட்டி இப்பவோ இரண்டு பேரும் பாடுவோம் என்று பிரபு பாட்டியைக் கூப்பிட இரண்டு



## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா ஸ்கூலுக்குப் போகும் போதும், வரும்போதும் எனக்குத் துணையாய் வாங்கப்பா. தீய நண்பர்கள், தீமைகளுக்கு விலக்கிப் பாதுகாத்துக் கொள்ளுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே.

## மனப்பாட வசனம்

பயப்படாதே! நான் உனக்குத் துணை நிற்கிறேன்.
ஏசாயா 41:14.



